| | |
|---|---|
| அனுப்புநர் | பெறுநர் |
| திரு.சா.சேதுராம வர்மா, | செய்தி ஆசிரியர், |
| அரசுத் தேர்வுகள்இயக்குநர் | அனைத்து செய்தி ஊடகங்கள். |
| சென்னை– 600 006. | |

ந.க.எண்.014894/பி1/2021 நாள் :19.01.2022

ஐயா/அம்மையீர்,

பொருள் : சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் – பத்தாம் வகுப்பு துணைத்தேர்வு செப்டம்பர் 2021 – அசல் மதிப்பெண் சான்றிதழ் விநியோகம் செய்யப்படுவது குறித்து – செய்திக்குறிப்பு வெளியிடக் கோருதல்– தொடர்பாக.

-----

நடைபெற்று முடிந்த செப்டம்பர் 2021 பத்தாம் வகுப்பு துணைப் தேர்வு எழுதிய தனித்தேர்வர்களுக்கு, அசல் மதிப்பெண் சான்றிதழ் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட மதிப்பெண் சான்றிதழ் வழங்குவது தொடர்பான ''செய்திக்குறிப்பு'' இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அதனை பொதுமக்களும், மாணவர்களும் அறிந்து கொள்ளும் வகையில் தங்களது நாளேட்டில் செய்தியாக வெளியிடுமாறும், தொலைக்காட்சியில் ஒலி/ஒளிபரப்புமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

'இது விளம்பரம் அல்ல' என்பதையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒம்/–
இயக்குநர்

**இணைப்பு:**
செய்திக் குறிப்பு

**நகல்:**
1. அனைத்து அரசுத் தேர்வுகள்உதவி இயக்குநர்கள்.
2. அனைத்து முதன்மை/ மாவட்டக் கல்விஅலுவலர்கள்.

**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை– 600 006**

**பத்தாம் வகுப்பு துணைத்தேர்வு, செப்டம்பர் 2021**

**அசல் மதிப்பெண் சான்றிதழ் மற்றும்**

**ஒருங்கிணைக்கப்பட்ட மதிப்பெண் சான்றிதழ் வழங்குதல்**

**குறித்த செய்திக்குறிப்பு**

நடைபெற்ற செப்டம்பர் 2021 பத்தாம் வகுப்பு துணைத்தேர்வெழுதிய தேர்வர்களுக்கு 19.11.2021 முதல் தற்காலிக மதிப்பெண் சான்றிதழை (Provisional Certificate) தேர்வர்கள் தாங்களே ஆன்–லைன் மூலம் பதிவிறக்கம் செய்துக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது.

தற்போது, பத்தாம் வகுப்பு தேர்வெழுதிய தேர்வர்கள் தங்களது அசல் மதிப்பெண் சான்றிதழ்களை **21.01.2022 (வெள்ளிக்கிழமை)** முதல், அவர்கள் தேர்வெழுதிய தேர்வு மையங்களிலேயே பெற்றுக்கொள்ளலாம்.

இதில், நிரந்தர பதிவெண் (Permanent Register Number) கொண்ட தேர்வர்கள், இதற்கு முந்தைய பருவங்களில் அவர்கள் தேர்ச்சி பெறாத பாடங்களை செப்டம்பர் 2021 துணைத்தேர்வில் தேர்வெழுதி, அனைத்துப் பாடங்களிலும் தேர்ச்சி பெற்றிருப்பின், அவர்களுக்கு ஒருங்கிணைக்கப்பட்ட அசல் மதிப்பெண் சான்றிதழ்களும், முழுமையாக தேர்ச்சி பெறாதவர்களுக்கு அவர்கள் தேர்வெழுதிய பாடங்களுக்கான மதிப்பெண் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

ஒம்/–
இயக்குநர்

**தேதி:19.01.2022.**
**இடம்:** சென்னை– **600 006.**